நீதிமன்றப் படிவ எண்.53
(விதி 42–ஐ காண்க)
சாட்சியின் சான்றுரை
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
மகிளா நீதிமன்றம் , கடலூர்
அமர்வு வழக்கு எண்.99 /2021

அரசு தரப்புக்காக அ. சா.7 சாட்சியின் சான்றுரைகள்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஆனந்தகுமார், ஆர்.டி.ஓ | தொழில்/ பதவி | |
| கணவர்/தந்தை பெயர் | | வயது | |
| கிராமம் | | வட்டம் | |
| சாட்சிப்பட்டியலில் வரிசை எண் : L.W. 14 | | | |

எதிரி ஆஜரில் இருந்தர்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 24th day of September 2025.

**<u>முதல் விசாரணை</u>**– (ஆரம்பிக்கப்பட்ட நேரம் 11.18 )

நான் தற்போது திருவள்ளூர் மாவட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலராக நெடுஞ்சாலைத் துறையில் பணிபுரிந்து வருகிறேன். 2011 ஆம் ஆண்டு நான் விருத்தாசலத்தில் வருவாய் கோட்டாட்சியராக பணிபுரிந்த சமயத்தில் மங்கலம்பேட்டை காவல்நிலையத்தில் இருந்து 29.09.2011 அன்று சத்யா என்ற பெண் சந்தேக மரணம் சம்மந்தமாக கு.வி.மு.ச பிரிவு 174–ன் கீழ் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை எண்.255/2011 என்ற முதல் தகவல் அறிக்கை எனக்கு அனுப்பப்பட்டது. அன்று மாலை 04.00 மணிக்கு இந்த முதல் தகவல் அறிக்கை எனக்கு கிடைத்ததால் அன்றைய தேதியில் பிரேத விசாரணை மேற்கொள்ளவில்லை. மறுநாள்

30.09.2011 ஆம் தேதி விருத்தாசலம் அரசு மருத்துவமனையில் காலை 10.00 மணிக்கு பிரேதத்தின் மீது விசாரணை நடத்தினேன். மணமகன் வீட்டு சார்பாக பாலசுப்ரமணியனின் அப்பா வெள்ளையன், பாலசுப்ரமணியனின் அம்மா தனலட்சுமி, இறந்துபோன சத்யாவின் அப்பா சங்கர், சத்யாவின் அம்மா சுமதி, பஞ்சாயத்தார்கள் ரவி, செல்வம், ராயர் ஆகியோரை விசாரித்து சத்யாவின் இறப்பில் வரதட்சணைக்கான காரணம் ஏதும் இல்லை என்றும் பாலசுப்ரமணியன் வேறு ஒருவருடன் தொடர்பு வைத்திருந்து அந்த பெண்ணிற்கு குழந்தை பிறந்ததால் தான் சத்யா இறந்தார் என்றும் பாலசுப்ரமணியன் இருதார மணம் செய்து கொண்டதாலும் அதனால் ஏற்பட்ட துன்புறுத்தலும் கொடுமையும் சத்யாவின் இறப்பிற்கு காரணம் என்றும் காவல்துறை மேற்கொண்டு விசாரணை செய்யலாம் என்றும் என்னுடைய அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன். அதை விருத்தாசலம் காவல் துணை கண்காணிப்பாளருக்கு அனுப்பி வைத்துள்ளேன். (அந்த ப.மு. (அ.5)3905/2012 நாள் 09.02.2012 என்று நான் வழங்கிய 4 தாள்கள் கொண்ட அறிக்கை **அ.த.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது). துணை கண்காணிப்பாளர் என்னை விசாரிக்கவில்லை.

## <u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

விருத்தாசலம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து மங்கலம்பேட்டை காவல்நிலையம் அரை மணி நேர பயண தூரத்தில் உள்ளது என்றால் சரிதான். என்னுடைய அறிக்கையுடன் எனக்கு கிடைத்த முதல் தகவல் அறிக்கை மற்றும் நான் விசாரித்த நபர்களின் வாக்குமூலங்கள் ஆகியவற்றை இணைத்து அனுப்பி வைத்தேன். நான் மறுநாள் விசாரணை செய்தபோது என்னுடன் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் உதவியாளர்கள் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். கிராம நிர்வாக அலுவலர் நான் விசாரித்த சாட்சிகளை அடையாளம் காட்டினார்களா என்றால் வருவாய் ஆய்வாளர் மற்றும் போலிசார் அடையாளம் காட்டினார்கள். கிராம நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வாளர் ஆகியோரை நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் விசாரித்த

வாக்குமூலத்தில் கிராம நிர்வாக அலுவலரிடம் கையொப்பம் பெறவில்லை என்றால் அது தேவையில்லை என்று நான் சொல்கிறேன். என்னுடைய விசாரணையில் சத்யா என்பவரை எதிரி துன்புறுத்தியது சம்மந்தமாக ஏற்கனவே புகார் அளித்ததாக சாட்சிகள் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். நான் இந்த விசாரணையை எங்கு செய்தேன் என்றால் விருத்தாசலம் அரசு மருத்துவமனையில் செய்தேன். சத்யா என்பவர் இறந்து போன இடத்தை நான் பார்வையிட்டேனா என்றால் இல்லை. பாலசுப்ரமணியன் இரண்டாவது திருமணம் சம்மந்தமாக நான் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது சம்மந்தமாக ஆவணம் எதுவும் என்னிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். ஆனால் வாக்குமூலமாக சொல்லியுள்ளார்கள். என்னுடைய விசாரணையில் பாலசுப்ரமணியன் மனைவி சத்யா குழந்தை இல்லாததால் மன உளைச்சலில் இருந்ததாக சாட்சிகள் என்னிடம் தெரிவித்தார்கள் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. என்னுடைய விசாரணையில் இறந்துபோன சத்யாவிற்கு குழந்தை இல்லை என்பது தெரியவந்ததா என்றால் அது சம்மந்தமாக சாட்சிகள் எதுவும் சொல்லவில்லை. இறந்துபோன சத்யாவிற்கு குழந்தை இல்லாததால் மனஉளைச்சல் காரணமாக தற்கொலை செய்து இறந்து விட்டார் என்றும் அது என்னுடைய விசாரணையில் தெரியவந்தது என்றும் போலிசார் கேட்டுக்கொண்டதால் அதை குறிப்பிடாமல் விட்டுவிட்டேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் சத்யா இறந்துபோன இடத்திற்கு சென்று விசாரித்திருந்தால் இந்த விவரம் தெரிந்திருக்கும் என்றும் எனவே சந்தேக மரணம் சம்மந்தமாக விசாரணை குறித்த நடைமுறைகளையும் அத்யாவசிய கூறுகளையும் நான் கடைபிடிக்கவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய அறிக்கையில் தூக்குமாட்டிக்கொண்டு இறந்திருக்கலாம் என்று என்னுடைய அனுமானத்தின் பேரில் தான் குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். சத்யா எந்த பொருளை பயன்படுத்தி தூக்குமாட்டிக்கொண்டார் என்று என்னுடைய விசாரணையில் சாட்சிகள் சொல்லவில்லை என்றால் சரிதான். என்னுடைய அறிக்கை 6 நாட்கள் காலதாமதமாக போலிசாரால் பெறப்பட்டது என்று சொன்னால் சரிதான். நான் சரிவர விசாரணை செய்யாமல் போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க அவருக்கு

ஆதரவாக அறிக்கை கொடுத்து சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை
(முடிக்கப்பட்ட நேரம் 11.40 )

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 24 ஆம் நாளன்று, 1969–ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கிறேன்.

சாட்சியின் கையொப்பம்

*" என்னால்/என் முன்பாக திறந்தவெளி நீதிமன்றத்தில் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என வாக்குமூலதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."*

(Sd/–G.Kulasekaran)
அமர்வு நீதிபதி,
மகிளா நீதிமன்றம்,
கடலூர்.